ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2123/18 - 2019 මැයි මස 13 වැනි සඳුදා - 2019.05.13

*2123/18 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: 4/2/1/90.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/2/2017/CEB/267.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தின் தொம்பே பிரதேச செயலகப் பிரிவின் 392/ஏ ஆம் இலக்க, வெரலுகம்பல கிராம அலுவலர் பிரிவின் வெரலுகம்பல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளரினால் அளவிட்டு தயாரிக்கப்பட்ட ஆ. க. இல. கம். 4119 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப் பட்டுள்ள பெயர்களையும் அளவுகளையும் கொண்ட இரு காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

ஆ. சு. இல. கம். 4119 - காணித்துண்டுகளின் விபரம்

**1. துண்டு இல. 01**

காணியின் பெயர் : புஞ்சி நெதுன்கொல்ல; விபரம் : தோட்டம், ஏறத்தாள 25 வருட கால தெங்குச் செய்கை, ஏறத்தாள 2 வருட கால அன்னாசி செய்கை மற்றும் கலப்புப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : பத்மினி லொக்கு பாலசூரிய, இல. 910/10/ஜே, அதிகாரம் வத்தை, எத்துள்கோட்டே; விஸ்தீரணம்: 0.1813 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 02**

காணியின் பெயர் : புஞ்சி நெதுன்கொல்ல; விபரம் : வீட்டுத் தோட்டம், கலப்புப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : அருண ஆரியவங்ச, இல. 254/ 1, பெப்பிலியவல; விஸ்தீரணம்: 0.0031 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தொம்பே பிரதேச செயலகத்தில் என் முன்பாக


1A - G 30059 - 37 (2019/05)



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளுடன் எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எம். டீ. ஜே. பிரசாத்,
பிரதேச செயலாளர்,
தொம்பே.

பிரதேச செயலகம்,
தொம்பே,
2019, மே 09.

5 - 756

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 4/2/1/87.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/2/2016/CEB/20.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் 2057/9 ஆம் இலக்க மற்றும் 2018.02.06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட எனது விளம்பரத்தில் ஆ. சு. இல. கம். 4064 இன் துண்டு இல. 1, பின்வருமாறு துண்டு இல. 3, 4, 5 மற்றும் 6 ஆகவும் துண்டு இல. 2 இன் காணியின் பெயர் ரதாவான எஸ்ட்டேட் ஆகவும் திருத்தப்பட வேண்டும் என்பதை இத்தால் அறியத் தருகின்றோம்.

ஆ. சு. இல. கம். 4064

**துண்டு இல. 3**

காணியின் பெயர் : ரதாவான எஸ்டேட்; விபரம் : வீதி; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : ஏ. ஆர். புன்யசிறி ராமநாயக்க, 66/1, ருவன, தெமலகம; விஸ்தீரணம்: 0.0100 ஹெக்டயார்.

**துண்டு இல. 4**

காணியின் பெயர் : ரதாவான எஸ்டேட்; விபரம் : வீதிப் பாதுகாப்பு; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : கண்டுபிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம்: 0.0025 ஹெக்டயார்.

**துண்டு இல. 5**

காணியின் பெயர் : ரதாவான எஸ்டேட்; விபரம் : திறந்த கழிவு நிலம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : ஏ. ஆர். புன்யசிறி ராமநாயக்க, 66/1, ருவன, தெமலகம; விஸ்தீரணம்: 0.0036 ஹெக்டயார்.

**துண்டு இல. 6**

காணியின் பெயர் : ரதாவான எஸ்டேட்; விபரம் : திறந்த கழிவு நிலம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : ஏ. ஆர். புன்யசிறி ராமநாயக்க, 66/1, ருவன, தெமலகம; விஸ்தீரணம்: 0.0162 ஹெக்டயார்.

எம். டீ. ஜே. பிரசாத்,
பிரதேச செயலாளர்,
தொம்பே.

பிரதேச செயலகம்,
தொம்பே,
2019, மே 10.

5 - 757

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.